| | | | |
|---|---|---|---|
| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் - 17. தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இனப்பெருக்கம் | அலகு | 17 |
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 11 |

## 17. தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இனப்பெருக்கம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்

அ) வெங்காயம் ஆ) வேம்பு இ) இஞ்சி ஈ) பிரையோஃபில்லம்

2. பாலிலா இனப்பெருக்க முறையான மொட்டு விடுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யும் உயிரினம்

அ) அமீபா ஆ) ஈஸ்ட் இ) பிளாஸ்மோடியம் ஈ) பாக்டீரியா

3. சின்கேமியின் விளைவால் உருவாவது -------

அ) சூஸ்போர்கள் ஆ) கொனிடியா

இ) சைகோட் (கருமுட்டை) ஈ) கிளாமிடோஸ்போர்கள்

4. மலரின் இன்றியமையாத பாகங்கள்:

அ) புல்லிவட்டம், அல்லிவட்டம் ஆ) புல்லிவட்டம், மகரந்தத்தாள் வட்டம்.

இ) அல்லிவட்டம், சூலக வட்டம் (ஈ) மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம்

5. காற்றின் மூலம் மகரந்தச்சேர்க்கை நடைபெறும் மலர்களில் காணப்படும் பண்புகள்

அ) காம்பற்ற சூல்முடி ஆ) சிறிய மென்மையான சூல்முடி

இ) வண்ண மலர்கள் ஈ) பெரிய இறகு போன்ற சூல்முடி

6. மூடிய விதையுடைய தாவரங்களில் (ஆஞ்சியோஸ்பெர்ம்கள்) ஆண் கேமீட் எவ்வகை செல்லிலிருந்து உருவாகிறது?

அ) உற்பத்தி செல் ஆ) உடல் செல்

இ) மகரந்தத்தூள் தாய் செல் ஈ) மைக்ரோஸ்போர்

7. இனச்செல் (கேமீட்டுகள்) பற்றிய சரியான கூற்று எது?

அ) இருமயம் கொண்டவை

ஆ) பாலுறுப்புகளை உருவாக்குபவை

இ) ஹார்மோன்களை உற்பத்தி செய்கின்றன

ஈ) இவை பால் உறுப்புகளிலிருந்து உருவாகின்றன.

LIVEWORKSHEETS

8. விந்துவை உற்பத்தி செய்யக்கூடிய அடர்த்தியான: முதிர்ந்த மிகவும் சுருண்ட தனித்த நாளம் இவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) எபிடிடைமிஸ்

ஆ) விந்து நுண்நாளங்கள்

இ) விந்து குழல்கள்

ஈ) விந்துப்பை நாளங்கள்

9. விந்து உருவாக்கத்திற்கு ஊட்டமளிக்கும் பெரிய நீட்சியடைந்த செல்கள்

அ) முதல்நிலை விந்து வளர் உயிரணு

ஆ) செர்டோலி செல்கள்

இ) லீடிக் செல்கள்

ஈ) ஸ்பெர்மட்டோகோனியா

10. ஈஸ்ட்ரோஜனை உற்பத்தி செய்வது

அ) பிட்யூட்டரியின் முன்கதுப்பு

ஆ) முதன்மை பாலிக்கிள்கள்

இ) கிராஃபியன் பாலிக்கிள்கள்

ஈ) கார்பஸ் லூட்டியம்

11. கீழ்க்கண்டவற்றுள் எது IUCD ?

அ) காப்பர் – டி ஆ) மாத்திரைகள் (Oral Pills)

இ) கருத்தடை திரைச் சவ்வு ஈ) அண்டநாளத் துண்டிப்பு

ஆக்கம் செ. பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர். அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்

LIVEWORKSHEETS